CC.No. 57/2021
PW – 3
05.05.2026
பெயர் : செல்வராஜ்
த/பெ. : ஆறுமுகம்

<u>எதிரிதரப்பில் குறுக்கு விசாரணை</u>

காலை நேரம் என்பதால் சென்னை போன்ற வெளியூர்களில் இருந்து வரக்கூடிய பயணிகள் அதிகளவில் பேருந்துகளில் வந்து பேருந்து நிலையத்தில் இறங்குவார்கள் என்று சொன்னால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லும் இடத்தின் அருகில் சாலையின் நடுவே தடுப்பு சுவர் உள்ளது என்று சொன்னால் சரிதான். விபத்து நடந்ததாக சொல்லும் இடத்திற்கு சற்று மேற்கே நான்கு ரோடுகள் சந்திக்கக்கூடிய இடம் என்று சொன்னால் சரிதான். புதுக்கோட்டை புதிய பேருந்து நிலையத்தில் பேருந்துகள் உள்ளே செல்வதற்கும் வெளியே வருவதற்கும் தனித்தனி வாயில்கள் உள்ளது. மேற்படி இரண்டு வாயில்களுக்கும் அருகே ஆட்டோ ஸ்டாண்ட் உள்ளதா என்று கேட்டால் அது பற்றி எனக்கு தெரியாது. பேருந்துகள் வெளியேரும் இடத்தில் வெளிப்புற காவல் நிலையம் உள்ளதா என்று எனக்கு தெரியாது. விபத்து நடந்தவுடன் 108 ஆம்புலன்சிற்கு நான் தகவல் சொல்லவில்லை. விபத்து நடந்த இடத்திற்கு அருகில் நான் நின்று கொண்டிருந்ததால் எல்லாரும் ஓடி சென்று பார்த்தபோது நானும் அங்கு சென்று பார்த்தேன். காலை 5 மணி என்பதால் அந்த சமயத்தில் கடைகள் பெரும்பாலும் திறந்திருக்கவில்லை. விபத்து சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள். விபத்து நடந்த தேதியில் காலை சுமார் 11.00 மணியளவில் போலிசார் என்னை விசாரித்தார்கள். விபத்து சம்பவம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்று சொன்னாலும் போலிசார் கேட்டுக்கொண்டதன்பேரில் அரசு தரப்புக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னாலும் சரியல்ல.

Sd/– செல்வராஜ்

சாட்சி சொன்னபடி என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டு கையெழுத்து பெறப்பட்டது.
Sd/– திரு.K.S.பால்பாண்டியன்,
தலைமை நீதித்துறை நடுவர்,
புதுக்கோட்டை.